**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6634

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 23.04.2023

Accepted: 10.06.2023

Published: 01.07.2023

Citation:
Balakrishnan, M. "Premarital and Extra Marital Sexual Issues in Tanjore Region Based Tamil Novels." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 97–104.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6634

*Corresponding Author:
balutamizh1880@bdu.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Premarital and Extra Marital Sexual Issues in Tanjore Region based Tamil Novels

**M. Balakrishnan**
*Assistant Professor, Department of Tamil*
*Center for Distance and E-Education, Bharathidasan University*
*Tiruchirappalli, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0007-1678-9949*

**Abstract**

The family system is the organization that appears to fulfill the natural sexual needs of a man. A consensual sex through legal or traditionally and ritually defined, accepted marriage is a statute norm in Tamil society and hence it has systemically regulated the fulfillment of a man's sexual need within the family system. But premarital sex does happen with or without the knowledge and acceptance of society. Extramarital or post marital relationships also happen in the event of unfulfilled desires and expectations. Such illicit sexual affairs create problems within family leading to disturbed and fragmented marital life and fatal consequences at times. Illicit affairs and its impact on family well being has formed the theme of Tanjore based novels like sennel, vellikizhamai, nenjin naduvae, kuruthipunal, poruppu, mathipetra minor, mogamul, velvi thee, pasitha manudam. This article explores these novels in this context. While issue of premarital has been dealt in sennel, vellikizhamai, nenjin naduvae, kuruthipunal and pasitha manudam, impact of post marital relationship has been depicted in pasitha manudam, velvi thee. Sexual affairs with prostitute and mistress has been narrated in poruppu, mathipetra minor, kuruthipunal (Indhira Parthasarathy) and nenjin naduvae (C.M. Muthu).

**Keywords:** Family, Sex, Sexuality, Dasis, Issues, Tamil Novels, Review

**References**

1. Indira Parthasarathy. 1975. *Gurutipunal*, Chennai, Eastern Publishing House.
2. Ramamirtattammal. 1936. *Movalur. Cow. Honorable Minor*, Nagapattinam, Sivasakthi Publishing House.
3. 1978. *Karichan's Little Hungry Deer*, Nagercoil, Kalachuvadu Publishing House.
4. Karunanidhi, M. 1983. *Friday*. Chennai, Bharati Publishing House.
5. Oasis Sundaraperumal. 1999. Chennel, Chennai, New Century Book House(P) Ltd.,

# தஞ்சை வட்டார நாவல்களில் பாலுறவுச் சிக்கல்கள்

*முனைவர் மூ. பாலகிருஷ்ணன்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ்ச் சமூகம் திருமணத்தின் வழியேதான் பாலுறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நியதியை வகுத்திருக்கிறது. ஆனால் திருமணத்திற்கு முன்பே சிலர் பாலியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பாலியல் ஆசைகள் நிறைவேறாதபோது திருமணத்திற்குப் பின்பு பாலியல் உறவுகள் நிகழ்கின்றன என்றும், இவ்வாறான முறையற்ற பாலியல் உறவுகள் குடும்பத்துக்குள் சிக்கலைத் தோற்றுவித்துக் குடும்பப் பிரிவுக்கும், குடும்பநபர் இறப்புக்கும் காரணமாக அமைவதை நாவலாசிரியர்கள் சித்திரிக்கின்றனர். தஞ்சை வட்டாரத்தை மையயமாக வைத்துப் படைக்கப்பட்ட "செந்நெல்", "வெள்ளிக் கிழமை" "நெஞ்சின் நடுவே", "குருதிப்புனல்" "பொறுப்பு" மதிபெற்ற மைனர்" "மோகமுள்" வேள்வித்தீ, "பசித்த மானிடம்" ஆகிய நாவல்கள் வெளிப்படுத்தும் பாலியல் சிக்கல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. மனிதனின் இயற்கைக்குத் தேவையான பாலியல் தேவையை நெறிப்படி நிறைவு செய்துகொள்ளத் தோன்றிய அமைப்பே குடும்ப அமைப்பாகும். இப்பாலுறவுச் செயல்பாடு குடும்பம் என்ற அமைப்பைவிட்டு விலகி வெளியே நிகழ்கிற போது அது குடும்பத்தில் சிக்கலை விளைவிக்கின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *குடும்பம், பாலியல், பாலுறவு, தாசிகள், சிக்கல்கள், தமிழ் நாவல்கள், திறனாய்வு*

உலகெங்கும் உள்ள அனைத்துச் சமுதாய நிறுவனங்களுக்கெல்லாம் அடிப்படை நிறுவனமாக அமைவது குடும்பமாகும். பண்டைய புராதன சமுதாயத்தில் ஆண், பெண் உறவுகள் விருப்பம்போல் இருந்தன. இச்சமூகத்தில் தந்தையர் பலராகவும், தாயார் ஒருவராகவும் இருந்தனர். சொத்துடைமைச் சமூகத்தில் இவ்வாறான பல கணவர் முறை மறைந்து ஒருதாரமணம் உருப்பெற்றது. இதன்விளைவாகக் குடும்பம் என்ற அமைப்பு உருப்பெற்றது. இத்தகைய குடும்ப அமைப்புகளில் முறையற்ற பாலுறவுச் செயற்பாடுகளால் குடும்பத்தில் சிக்கல்கள் உருவாகின. அவ்வடிப்படையில் தஞ்சை வட்டாரத்தை மையயமாக வைத்துப் படைக்கப்பட்ட "செந்நெல்", "வெள்ளிக் கிழமை" "நெஞ்சின் நடுவே", "குருதிப்புனல்" "பொறுப்பு" மதிபெற்ற "மைனர்" "மோகமுள்" "வேள்வித்தீ" "பசித்த மானிடம்" ஆகிய நாவல்கள் வெளிப்படுத்தும் பாலுறவுச் சிக்கல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## குடும்பமும் பாலுறவும்

பண்பாடு என்பது மனிதனைத் தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவும் கருவியாகும். ஆகவேதான் மனித வாழ்வுக்கு உண்ணும் உணவைப் போல் பருகும் நீரைப் போல் இன்றியமையாது வேண்டப்படுகின்ற ஓர்இயற்கையான தேவையே பாலுறவு. (Bertrard Russel, marriage and morals, p.130.) என்று பெர்ட்ராண்டு ரஸ்ஸல் பாலுணர்வு குறித்த கருத்தினைக் கூறுகிறார். மேலும் அவர் ஆண் பெண் இடையே உள்ள கவர்ச்சி இயற்கையின் ஆணையாக உள்ளது. அந்த

ஆணையை நிறைவேற்றுவதற்கு உடம்பு எந்நேரமும் காத்திருக்கிறது. சமுதாய, சமய, அரசியல் அடிப்படையில் எத்தனையோ விதிமுறைகள் ஏற்படுத்திக்கொண்டு உள்ளம் தடுமாறுகின்றது. உடம்பிற்கும் உள்ளத்திற்கும் போராட்டம் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. இப்போராட்டம் எல்லோருக்கும் உண்டு. மனித வாழ்வின் தவிர்க்க முடியாத அம்சமாகத் தவிர ஆற்றல்பெற்ற ஒரு கூறாக இந்தப் போராட்டம் இருந்து வருகிறது. (Bertrard Russel, marriage and morals, p. 130), என்றும் விளக்குகிறார்

## தமிழ்ச் சமூகமும் பாலுறவும்

மனித இனத்திற்கு இன்றியமையாத தேவையாகப் பாலுறவு விளங்கினாலும் வரையறுக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தில் மனிதன் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் நிறைவேற்றிக்கொள்ள இயலாது. அது ஒரு நெறிப்படுத்தப்பட்டு, குடும்ப அமைப்பிற்குள் கணவன் - மனைவி என்ற உறவிற்குள் ஏற்படுத்திக்கொள்ளவே அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சமூகப் பண்பாட்டு நிலையில் இதற்குப் பலகாரணங்கள் உண்டு. ஓர் ஆணோ பெண்ணோ தன் பால் ஆர்வத்தைத் தன் இணையைத்தவிர வேறு எவரிடமும் வைத்துக் கொண்டால் இழிவாகக் கருதப்படுகிறது. இது அவர்களின் உயர்மதிப்பான நடத்தை முறைகளைப் பாதிக்கிறது. மேலும் இது பண்பாட்டு மீறலாகவும் கருதப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தில் ஆண் பெண் பாலியல் நடத்தைகள் தனிமனித நடத்தை முறையாகப் பார்க்கப்படாமல் சமூகத்தோடு பொருந்தியே பார்க்கப்படுகிறது. ஆகவே தனிமனிதனைப் பாதிக்கின்ற இப்பாலியல் காரணி அவன் சார்ந்துள்ள முதன்மைச் சமூக நிறுவனமான குடும்பத்தையும் சிக்கலுக்கு உள்ளாக்குகிறது.

தனிமனிதச் சிக்கல்கள் யாவும் குடும்பச் சிக்கல்களாக மாறுகின்றன. அதனடிப்படையில் திருமணஉறவுமூலம் குடும்ப அமைப்புக்குள் ஈடுபடும் ஆண் - பெண் இருவருக்கும் எழுகின்ற பாலுணர்வுச் சிக்கல்கள் குடும்பத்தையும் பாதிக்கின்றன. இத்தகைய பாலுணர்வுச் சிக்கல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாவல்களிலும் இடம்பெறுகின்றன. இவற்றைத் திருமணத்திற்கு முன் ஏற்படும் பாலுறவுச் சிக்கல்கள், திருமணத்திற்குப் பின் ஏற்படும் பாலுறவுச் சிக்கல்கள் என்று பகுத்துக் காணலாம்.

## திருமணத்திற்கு முன் ஏற்படும் பாலுறவுச் சிக்கல்கள்

கணவன் மனைவியின் வழி நிகழும் பாலுறவே சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் சிலர் மிகுந்த பாலினத் தூண்டலால் திருமணத்திற்கு முன்பே பாலுறவை ஏற்படுத்திக் கொள்கின்றனர்

## திருமணத்திற்கு முன் பல பெண்களுடன் உறவு கொள்ளுதல்

“செந்நெல்” நாவலில் கோபாலகிருஷ்ணநாயுடு திருமணமானால் வேறு பெண்ணுடன் பாலியல் உறவுகொள்ள முடியாது எனும் காரணத்தால், திருமணமாகாமலேயே தினமும் ஒரு பெண்ணுடன் உல்லாசமாக இருக்கிறார் என்று சோலை சுந்தரபெருமாள் குறிப்பிடுகின்றார்

“ஒருத்திய கல்யாணம் பண்ணிக்கிட்டு அவக்கிட்ட மட்டும். அவருக்கு புடிக்காமத்தான். அடாவடித்தனமா நெதம் நெதம் ஒரு பொம்பளைய கொண்டாந்து வச்சிக்கிட்டு இருக்கிறதும். சிலதுகள் நாள் கணக்கில் வச்சிருந்திட்டு அனுப்பி வைக்கிறதும், சந்தர்ப்பத்தில் குடும்பத்தில் உள்ள பொம்பளைங்களையும் விட்டுவைக்காம இருக்கிறத பாத்த அவரோட நைனா, இருக்கிறதோட செத்துப் போயிடலாம்ன்னு மனசு ஒடிஞ்சுப்போய் தூக்கு மாட்டிக்கிட்டு செத்துப் போயிட்டாருங்கிற ஒரு பேச்சும்

ஊருல நிக்குது". (ப.55)என்று ஊரார் பேச்சுக்களின் வழி சோலை சுந்தரபெருமாள் எடுத்துரைத்துள்ளார்.

"வெள்ளிக் கிழமை" நாவலில் பாலகங்காதரத் தேவர் என்பவரால் ஆனந்திக்குக் களங்கம் ஏற்பட்டதை அறிந்தவுடன், தானும் தன் ஆசைக்கு ஆனந்தியை இணங்கவைத்து தன்னுடைய பாலியல் வெறியைத் தீர்த்துக்கொள்ள இராமகிருஷ்ணன் எண்ணுகிறான். மேலும் தனக்கு விருப்பமான பெண்ணைத் தன்னுடைய ஆசைக்கு இணங்க வைப்பதை வழக்கமாக வைத்திருக்கிறான் இராமகிருஷ்ணன்.

வேம்பு மூலம் கிடைத்த கரும்பு இதுவெனக் கொண்டு டைகர் மகிழ்ந்தான்! தொழில் முறைக்கு ஊனம் வந்து விடக்கூடாதே என்று ரகசியமாகவே அவனது தொடர்பை வைத்துக் கொண்டிருந்தாள். பலாத்காரமாகக் கற்பழிக்கப்படுவது பாபவிமோசனத்திற்கு உரியதுதான். அந்த ரகசியத்தின் அடிப்படையிலேயே தன் ஆசைக் கோட்டையை எழுப்பிவிடத் தீர்மானித்துப் புறப்பட்டான். (ப.32) என்று திருமணமாகாத டைகர் என்று அழைக்கப்படும் இராமகிருஷ்ணன் பல பெண்களுடன் பாலியல் உறவு வைத்திருப்பதைக் கலைஞர் மு.கருணாநிதி எடுத்துரைத்துள்ளார்.

## முறையற்ற தொடர்பு

"நெஞ்சின் நடுவே" நாவலில் திருமணமாகாமல் ஆண்பெண் காதலில்லாமல், காமவெறியுடன் முறையற்ற உறவு வைத்திருப்பது விளக்கப்பட்டுள்ளது. பொட்டச்சிங்கமேல கையைப் போடணுங்குற ஒண்ணுதான் அவனுங்க நெனப்பேதவிர, காதல் இல்ல .. இப்போ இப்படி சுத்திப் பாருங்க. அங்கனக்கி அங்க நாணக்காடுதான் கண்ணக்குத் தெரியுதே தவிர யாராச்சும் ஒரு மனுசரை பார்க்க முடியிதா? இன்னும் செத்தக் களிச்சிப் பாத்தா பொம்பிளையும் ஆம்பிளையும் தனித்தனியா பிரிஞ்சி போறதை பார்க்கலாம். அவங்க எப்பவந்தாங்க. எப்படி சேந்தாங்க. எப்படி பிரிஞ்சாங்கங்கறதையெல்லாம் நம்பளால கணக்குபண்ண முடியாது சின்னையா ஒவ்வொரு ஆம்பளை மொவத்திலேயும், ஒவ்வொரு பொட்டச்சி மொவத்திலேயும் காமவெறிதான் தூக்கலாத் தெரியுமேதவிர, அன்பைப் பாக்கவே முடியாது. உம்மையான ஆம்பளை பொம்பளையை ஊருக்குள்ள பாக்கவே முடியாது. உம்மையான ஆம்பளை பொம்பிளையை ஊருக்குள்ள பாக்குறதுக்கு யோக்கிதையத்துப் போச்சி. (ப.126) பெண்கள் ஆண்களுடனும், ஆண்கள் பெண்களுடனும் தவறான உறவு வைத்திருப்பதை அண்ணாமலையிடம் வளையாபதி எடுத்துரைப்பதின் வழி அறியமுடிகிறது.

"குருதிப்புனல்" நாவலிலும் கோபால் திருமணத்திற்கு முன் பங்கஜம் என்ற பெண்ணுடன் உறவு வைத்திருப்பதை இந்திராபார்த்தசாரதி குறிப்பிடுகின்றார்.

"பசித்தமானிடம்" நாவலில் திருமணத்திற்கு முன்பு கணேசன் மிகுந்த அழகாக இருக்கிறான். அதனால் பல பெண்கள் வலியவந்து பாலியல் உறவு கொள்வதை நாவல் முழுவதும் சித்திரித்துள்ளார். கும்பகோணத்தில் ஒருமுறை ஒரு குழு போராட்டம் நடத்துகிறது. எதிர்பாராமல் அங்கே செல்கின்றான் கணேசன். அவனையும் போலிஸ் துரத்துகிறது. உடனே அவன் ஒரு வீட்டிற்குள் போய் ஒழிந்து கொள்கிறான். அவ்வீட்டில் ஒரு பெண் இருக்கிறாள். அவள் இவன் பள்ளிக்குப் போகிற காலத்தில் அவனை இரசித்திருக்கிறாள். ஆதலால் அவ்விருவருக்குள்ளேயும் பாலியல் உறவு நிகழ்கிறது.

அவளையும் அள்ளித் தூக்கி கிடத்தினான். இருவருமே சட்டைகளைக் கழற்றி எறிந்தனர் ஒருவரை மற்றவர் பசியாருவது போன்ற வேகத்துடன் உடல்களையும் உணர்ச்சிகளையும் பரிமாறிக் கொண்டனர். அந்தச் சிறிய மின்விசிறி தந்த காற்றால் மாற்ற முடியாத

வெப்பமும் வியர்வையும் சற்றே தணிந்தன. (ப.186) என்று கரிச்சான் குஞ்சு அவ்விருவரிடையேயும், பாலியல் உறவு நடந்ததைச் சித்திரித்துள்ளார். இதேபோல் உடல்நலக் குறைபாடு காரணமாகக் கணேசன் மருத்துவமனைக்குச் செல்கிறான். அங்கு இவனைக் கண்ட மருத்துவப் பெண்மணி ஆசைப்பட்டுக் கணேசனுடன் பாலியல் உறவு கொள்கிறாள். இதுபோல் பல பெண்களுடன் தொடர்பு கொண்டதால் அவனுக்குப் பாலியல் நோய் வருகிறது. அதனால் இறுதியில் பிச்சைக்காரனாகி விடுவதாகக் கரிச்சான்குஞ்சு சித்திரித்துள்ளார்

### திருமணத்திற்குப் பின் ஏற்படும் பாலுறவுச் சிக்கல்கள்

"குருதிப்புனல்" நாவலில் கண்ணையா நாயுடுவும் அவரது அப்பாவும் திருமணத் திற்குப்பின் வேறு பெண்களுடன் பாலுறவு கொள்வதையும், வைப்பாட்டியாகவும் வைத்திருப்பதையும், வடிவேலு கண்ணையா நாயுடுவின் தந்தைக்கு வைப்பாட்டி மூலம் பிறந்த மகன் கண்ணையா நாயுடுவோட அப்பாரு இருந்தாரே திருமலைநாயுடு, அவருக்கு இங்கேயிருந்து நாயுடுவும் அவரோடு அப்பன் மாதிரிதான்னு சொல்றாங்க இல்லையா (ப.55) என்று இந்திரா பார்த்தசாரதி விவரிக்கின்றார்.

"பொறுப்பு" நாவலில் ராசு பணம் இருக்கும் தைரியத்தில் திருமணமாகி மனைவி இருக்கும்போதே வெளியூருக்குச் சென்று பெண்களுடன் பாலுறவு வைத்திருப்பதையும், வைப்பாட்டி வைத்திருப்பதையும் சி.எம்.முத்து குறிப்பிடுகின்றார்.

எப்போது பார்த்தாலும் அவருக்குப் பொம்பிளை சகவாசம் இருந்து கொண்டேயிருக்க வேண்டும். நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு நாயாய் அலைவார். உரலுக்குச் சீலை கட்டியிருந்தால் கூட செத்த நாழி நின்று அதனிடம் பேசிவிட்டுப் போக வேண்டுமென்று ஆசைப்படுவார் அடிக்கடி பாபநாசம் தேர்முட்டிக்கோ தஞ்சாவூர் மேலவீதிக்கோ லம்பாடிகளைத் தேடிப்போவார் ஒன்றுமில்லை என்கிற பட்சத்தில் ஐயம்பேட்டையிலிருக்கிற சொந்த வைப்பாட்டியிடத்தில் சகவாசம் பண்ணப் போய்விடுவார் இத்தனைக்கும் கிளிமாதிரிப் பொண்டாட்டியை வைத்துக் கொண்டுதான் இத்தனை ஆட்டமும். (பக்.20-21) என்று ஆண்கள் மனைவி இருக்கும்போதே வேறு பெண்களை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வதையும், பலபெண்களுடன் பாலியல்உறவு வைத்துக் கொள்ள எண்ணுவதையும் உணர்த்துகிறார். "நெஞ்சின் நடுவே" நாவலில் ராமலிங்கம் தன் மனைவி இருக்கும்போது வளையாபதியை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டு தன் அதீத பாலுறவுப் பசியைத் தீர்த்துக்கொள்ள எண்ணுகிறார். வளையாபதி, ஒன்ன என்னோட ஆசயத் தீத்துக்கறத்துக்காவ நா செஞ்ச இடஞ்சலையெல்லாம் மறந்துபுட்டு சந்தோசமாயிரு. இன்னம ஒனக்கு ஒரு கவலையுமில்லை நீ நெனச்சதையெல்லாம் நெறவேத்தி வைக்கிறேன். எது எப்படியிருந்தாலும் ஒன்ன பாத்துப்புட்டு வந்துரவோம்னுதான் நீ சொல்லி அனுப்பிச்ச எடத்துக்கு வந்தேன். அவன் சொன்னான். அவனது பார்வை முழுவதும் அவளது விலகிய மார்பையே கூர்மையாய் பார்த்துக் கொண்டிருந்தது. (ப.139) என்று திருமணத்திற்குப் பிறகும்கூட மனைவியை விடுத்து மற்ற பெண்களை நாடும் ஆண்களின் கீழ்த்தரமான மனப் போக்கை சி.எம்.முத்து உணர்த்துகிறார்

"மதிபெற்ற மைனர்" நாவலில் சோம சேகரன் திருமணம் முடிந்தவுடனே திருமண நிகழ்வில் நடைபெற்ற சங்கீதக் கச்சேரியில் சங்கீதம் இசைக்கிற காந்தா, கானவதியைக் கண்டு மையல்கொண்டு தன்மனைவியை விட்டுச் சென்றதை நாவலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

விவாகம் ஒருவாறு முடிவுபெற்றது. கடைசி தினம் கமலாபுரம் காந்தா - கானவதி சங்கீதக்கச்சேரி ஆரம்பமாகிறது. இவ்விருவரையும் பார்த்தவுடன் பழைய ஞாபகம் வந்துவிட்டது. சோமசேகரன் நோக்கம் இவ்விருவர்பாலும் சென்றுவிட்டது. கமலாபுரம் காந்தா - கானவதி பேரில்தான் காதல்கொண்டிருக்கிறேன் அவர்கள் எதைக்கேட்டாலும் கொடுப்போம்; நீங்கள் பார்த்து என் ராஜ்யம் முழுவதும் கொடுக்கச் சொன்னாலும் கொடுத்து விடுகிறேன். (ப.88) என்பதன் வழி தாசிகள் மேல் உள்ள மோகத்தால் மனைவியை விடுத்துக் கணவன் செல்வதை விளக்கியுள்ளதோடு, திருமணமான அன்றே தான் முன்பு சந்தித்த தாசிகளைக் கண்டவுடன் அவர்கள்மேல் விருப்பம்கொண்டு, தன் மனைவியை விடுத்துச் சொத்துக்களை இழக்க எண்ணும் ஆணின் நிலை மூவலூர் இராமாமிர்தத்தம்மாளால் உணர்த்தப்படுகிறது.

“பசித்த மானிடம்” நாவலில் கிட்டா திருமணத்திற்கு முன்னும் பின்னும் சமூகம் அனுமதிக்காத பாலுறவை மேற்கொள்கிறான். தனக்குக்கீழ் பணியாற்றும் சீமா அய்யரின் மனைவி பூமாவுடனும், மாச்சி என்ற பெண்ணுடனும் தன்னுடைய அண்ணன் மனைவியிடமும் பாலுறவு கொள்கிறான். இவ்வாறு கிட்டா பலரிடமும் பாலியல் உறவு வைத்திருப்பதை நாவல் சுட்டுகிறது.

குடும்ப வாழ்வில் ஈடுபட்ட ஒரு பெண்ணின் பாலியல் தேவை நிறைவுறாத தறுவாயில் அவள் வேறொரு ஆடவனை நாடுவதற்குப் முற்படுகையில் குடும்பத்திற்குள் சிக்கல் தோன்றுகிறது.

“வேள்வித்தீ” நாவலில் கண்ணனின் குடும்பம் கண்ணன், கௌசலை, குழந்தை ராஜீ என்ற மூவரைக் கொண்ட ஒரு நெசவாளர் குடும்பமாக இயங்குகிறது. இக்குடும்பத்தின் வாழ்வாதாரமான நெசவுத் தொழில் பாதிக்கப்படுகிறபோது அவர்களுக்கு உதவ ஹேமா என்ற கணவனை இழந்த பெண் முன்வருகிறாள். ஹேமாவும் கௌசலையும் நல்ல தோழிகள். ஹேமா கௌசலையின் எதிர்வீட்டில் இருப்பதால் அடிக்கடி வீட்டிற்கு வந்து அனைவருடனும் பழகும் வாய்ப்பு கிடைக்கிறது. ஹேமா, கௌசலையின் கணவன் மீது பற்றுவைத்து அவனுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்கிறாள். இதனால் கௌசலை-கண்ணன் இருவருக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டுக் குடும்பம் சிக்கலுக்கு உள்ளாகிறது.

கௌசலை கணவனிடம் சண்டையிட்டுத் தாய்வீடு செல்கிறாள். இதனையறிந்த ஹேமாக் கண்ணன் தனிமையில் இருப்பதை அறிந்து தன்னுடைய பாலியல் வேட்கையைத் தீர்த்துக்கொள்கிறாள். தாய்வீட்டிற்குச் சென்ற கௌசலை மனம்மாறி கணவன் வீட்டிற்கு வருகிறாள். அப்போது ஹேமாவின் கோலத்தைக் கண்டு தன்னுடைய கணவனும் தோழியும் தனக்குக் கொடுமை செய்துவிட்டதை எண்ணி வருந்துகிறாள்.

கௌசலை பேசவில்லை. ஹேமாவின் தலையும் சேலையும் இருந்த கோலத்தைப் பார்த்ததும் உண்மை விளங்கிவிட்டது. தன்னுடைய பொக்கிஷம் சூறையாடப்பட்டதை அறிந்ததும் அவளுக்கு அடக்கமுடியாத ஆத்திரம் வந்தது (ப.128) என்று தனது கணவனும் தோழியும் தன்னுடைய வாழ்க்கையை எண்ணாமல் தங்களுடைய வேட்கையைத் தீர்த்துக்கொண்டதை எண்ணிக் கௌசலை ஆத்திரமடைவதாக எம்.வி.வெங்கட்ராம் குறிப்பிடுகின்றார். ஹேமா கண்ணன் இருவரும் தாம்செய்த தவறை எண்ணி வருந்தாமல் மீண்டும் உறவுவைத்துக் கொள்வதை அறிந்த கௌசலை, எனக்கு என்ன தோணிச்சு தெரியுமா? உங்க கழுத்தை நெருக்கிக் கொல்லனும் போல இருந்தது செஞ்சிருப்பேன்.

பாவம்னுபட்டது. புருஷனைக் கொல்றது பெரிய பாவம், பிசாசாட்டம் உங்களைக் கொல்லனும்னு நினைச்சேனே என்று வருத்தமா இருந்தது. ஆனால் உங்களைப் பார்த்தாலே பிடிக்கலே. இந்த உடம்புல உப்புப்போல கரைஞ்சு நிறைஞ்சிருக்கீங்களே. என் உடம்பே எனக்கு அசிங்கமாப்படுதேன்னு. உங்களால்தான் இந்தக் குழந்தை உண்டாச்சு. இதைத் தொட்டாலும் பார்த்தாலும்; அடிவயிற்றப் புரட்டுது. (ப.129) என்று பேசுகிறார். இக்கூற்று அவளுடைய பாதிக்கப்பட்ட மனநிலையைக் காட்டுகிறது. மேலும் இறுதியில் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்கிறாள். ஒருவரின் தவறான பாலியல் தொடர்பினால் குடும்பத்திற்குள் சிக்கல் ஏற்படுவதோடு, உயிர் இழப்பும் ஏற்படுகிறது.

"மோகமுள்" நாவலில் இடம்பெறும் தங்கம்மா என்னும் பெண் வயதான ஒருவரின்மனைவி ஆவாள். அப்பெண்ணின் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் பாபு கல்லூரியில் பயின்று வருகிறான். தங்கம்மாவின் கணவனால் அவளுக்கு உடல்ரீதியான இன்பத்தை தரஇயலாது என்பதை அறிந்து பாபுமீது ஆசைப்படுகிறாள். அவனுடன் பாலுறவு வைத்துக்கொள்ளவும் எண்ணுகிறாள். இல்லை. இடிவிழுந்து செத்துப் போயிட்டா. ஒன்றுவிட்ட அத்தை தான் வளர்த்தா அதெல்லாம் இப்ப எனக்கு நினைக்கக் கூடவேண்டாம் போலிருக்கு, அப்பா, அம்மா வளர்த்திருந்தா, நான் இங்கே வந்து உங்களைப் பார்த்திருக்கப் போறேனா உங்களை நெனச்சு நெனச்சு இப்படி மத்யானமும் ராத்திரியும் தூக்கம் வராமல் ஏங்கிண்டிருப்பேனா (ப.160) என்று தங்கம்மா, பாபுவிடம் தன் ஆசையை வெளிப்படுத்துகிறாள். வயதான முதியவருக்கு இளம் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தால், அவள் தன்னுடைய பாலியல் தேவையை நிறைவுசெய்துகொள்ளப் பிற ஆடவனை நாடுகிறாள் என்பது விளக்கப்படுகிறது.

தமிழ்ச் சமூகம் திருமணத்தின் வழியே பாலுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நியதியை வகுத்திருக்கிறது. ஆனால் திருமணத்திற்கு முன்பே மிகச் சிலர் பாலியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சமூகம் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்நிகழ்வு நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. பாலியல் ஆசைகள் நிறைவேறாதபோது திருமணத்திற்குப் பின்பு பாலியல் உறவுகள் நிகழ்கின்றன என்றும், இவ்வாறான முறையற்ற பாலியல் உறவுகள் குடும்பத்துக்குள் சிக்கலைத் தோற்றுவித்துக் குடும்பப் பிரிவுக்கும், குடும்பநபர் இறப்புக்கும் காரணமாக அமைவதை நாவலாசிரியர்கள் சித்திரிக்கின்றனர்

மனிதனின் இயற்கைக்குத் தேவையான பாலியல் தேவையை நெறிப்படி நிறைவு செய்துகொள்ளத் தோன்றிய அமைப்பே குடும்ப அமைப்பாகும். இப்பாலுறவுச் செயல்பாடு குடும்பம் என்ற அமைப்பைவிட்டு விலகி வெளியே நிகழ்கிறபோது அது குடும்பத்தில் சிக்கலை விளைவிக்கின்றது. மற்றைய சமூகங்களைவிட தமிழ்ச் சமூகம் குடும்ப அமைப்பிற்குள்ளாகவே பாலியல் தேவையை நிறைவு செய்துகொள்ளலே முறையென நெறிப்படுத்தியுள்ளது. ஆனால் இப்பாலுறவு தமிழ்ச் சமூகத்தில் திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்குப் பின்பும் குடும்பத்தின் வெளியிலும் நடக்கிறது. இதனால் பல குடும்பங்கள் சிதைகின்றன. திருமணத்திற்கு முன்பான பாலியல் உறவு "செந்நெல்", "வெள்ளிக்கிழமை", "நெஞ்சின் நடுவே", "குருதிப்புனல்", "பசித்தமானிடம்" ஆகிய நாவல்களில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

திருமணத்திற்குப் பின்பான குடும்பத்திற்கு வெளியிலான பாலியல் உறவுகள் குடும்பத்திற்குள் சிக்கலை விளைவித்துப் பிரிவினையை உண்டு செய்வதைப் "பசித்தமானிடம்" நாவலும், குடும்பம் சிக்கலுக்கு உள்ளாகி உயிரிழப்பு நேரிடுவதை "வேள்வித்தீ" நாவலும் விளக்குகின்றன. மேலும் மனைவியை விடுத்துத் தாசிகளை நாடும் ஆண்களின் நிலையைப் "பொறுப்பு", "மதி பெற்ற மைனர்" ஆகிய நாவல்கள் சுட்டுகின்றன. மனைவியை விடுத்து வைப்பாட்டி வைத்துக் கொள்ளும் நிலையைக் "குருதிப்புனல்", "நெஞ்சின்நடுவே" ஆகிய நாவல்களில் இந்திராபார்த்தசாரதி, சி.எம்.முத்து ஆகியோர் சித்திரித்துள்ளனர் குடும்பத்தில் பாலுறவு விருப்பம் முழுதாகப் பெண்ணுக்கு நிறைவுபெறாதபோது வேறொரு ஆடவனை நாடும் சூழலை "மோகமுள்"ளில் தங்கம்மா பாத்திரத்தின் வழியும், "வேள்வித்தீ" நாவலில் ஹேமா என்ற பாத்திரத்தின் வழியும் நாவலாசிரியர்கள் தி.ஜானகிராமனும், எம்.வி. வெங்கட்ராமும் சித்திரிக்கின்றனர்.

## பயன்பட்ட நூல்கள்

1. இந்திரா பார்த்தசாரதி. 1975. *குருதிப்புனல்*, சென்னை, கிழக்குப் பதிப்பகம்.
2. இராமாமிர்தத்தம்மாள். மூவலூர். ஆ. 1936. *மதிபெற்ற மைனர்*, நாகப்பட்டினம், சிவசக்தி பதிப்பகம்.
3. 1978. *கரிச்சான் குஞ்சு பசித்த மானிடம்*, நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம்.
4. கருணாநிதி, மு. 1983. *வெள்ளிக்கிழமை*, சென்னை, பாரதி பதிப்பகம்.
5. சோலை சுந்தரபெருமாள். 1999. *செந்நெல்*. சென்னை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிமிடெட்.
6. ஜானகிராமன், தி. 1956. *மோகமுள்*. சென்னை, ஐந்திணைப் பதிப்பகம்.
7. முத்து. சி.எம். 2000. *பொறுப்பு*, சென்னை, அருந்ததி நிலையம்.
8. முத்து, சி.எம். 1982. *நெஞ்சின் நடுவே*, சென்னை, அறிவுப் பதிப்பகம்.
9. வெங்கட்ராம். எம்.வி. 1975. *வேள்வித்தீ*, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.